DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Tmt.M.Praveena, M.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.98/2019**

**CNR.No: TNTH06-000160 -2019)**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவா<br>(குறுவட்ட அலுவலர்,<br>எரசக்கநாயக்கனூர்,<br>உத்தமபாளையம் தாலுகா | Town | உத்தமபாளையம் |
| Father Name | : சிவணான்டி | Taluk | : உத்தமபாளையம் |
| Age | : 35 | **DW4** | |

நாள் : 28.07.2026

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) உத்தமபாளையம் வட்டாட்சியருக்கு சம்மன் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை இல்லை என்றால் சாட்சியானவர் பீல்டு ஒர்கிற்காக வெளியே செல்வதாகவும், வட்டாட்சியர் அலுவலகம் அவ்வப்போது வருவதாகவும் கூறுகிறார். வட்டாட்சியர் அலுவலக கோப்புகளை கையாளும் வேலை எனக்கு இல்லை என்றால் மனு யாரெனும் வட்டாட்சியரிடம் கொடுக்கும் பட்சத்தில், அதற்குண்டான கோப்புகளுடன் எங்களிடம் வரும். பின்னிட்டு நாங்கள் கையொப்பம் செய்து கோப்புகளை பெற்றுக்கொண்டு இடத்தை அளக்க செல்வோம் என்று சாட்சி கூறுகிறார்.

2) சர்வே துறை சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குரிய புல எண்கள், அளவீடுகள் குறித்த கோப்புகள் மட்டுமே எங்களிடம் வரும் என்றால் சரிதான். மற்ற கோப்புகள் எங்களிடம் வராது என்றால் சரிதான். மற்ற கோப்புகளை நான் கையாளவில்லை என்பதால் அக்கோப்புகளைக்குறித்து எனக்கு தெரியாது என்றும், அதனால் வட்டாட்சியருக்காக நான் அளிக்கும் சாட்சியமானது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா மாதிரி வரைபடத்தை நான்

பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா மாதிரி வரைபடத்தை பார்க்காமலேயே நான் மாதிரி வரைபடம் தவறாக உள்ளதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் தனக்கு முன்பிருந்த சர்வேயர் எதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

3) இவ்வழக்கில் எனக்கு முன்பு வேலை பார்த்த சர்வேயர் கொடுத்த அறிக்கைகளானது சரியானவை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நேற்று நான் தாவா சொத்தை அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டேன் என்றால் சரிதான். இதற்கு முன்பாக எப்போது நான் தாவா சொத்தை பார்வையிட்டேன் என்றால் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு சென்று பார்வையிட்டேன். நான் அவ்வாறு தாவா சொத்தை பார்வையிடுவதற்கு முன்னதாக வட்டாட்சியரிடம் அனுமதி பெற்று பார்வையிட்டேனா என்றால் இல்லை.

4) நான் எனது முதல் விசாரணை மற்றும் 1,2 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையின்போது தாவா சொத்தை பார்வையிடாமல் சாட்சி அளித்துள்ள நிலையில், வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் போது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் நான் தாவா சொத்தை பார்வையிட்டு, 1,2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. மேலும், சாட்சியானவர் முந்தைய குறுக்கு விசாரணையின்போது தாவா சொத்தின் இயற்கை அமைப்பு குறித்தும், சாக்கடை குறித்தும் வினா எழுப்பட்டதாகவும், நான் தாவா சொத்தை ஒன்றரை வருடங்களுக்கு முன்பு பார்வையிட்ட நிலையில் அதன் அமைப்பானது அவருக்க மறந்து விட்டதால் வழக்கு விசாரணையின் பொருட்டு தாவா சொத்தை பார்வையிட்டதாக சாட்சி கூறுகிறார்.

5) 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின்போது சாக்கடை மற்றும் இயற்கை அமைப்பு குறித்து தெரியாமல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 453/39-ல் சிமெண்ட் ரோடு இல்லை

என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணையின் போது சிமெண்ட் ரோடு உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் பக்கத்தில் தான் சிமெண்ட் ரோடு செல்வதாகவும், சர்வே எண். 453/39 ல் சிமெண்ட் ரோடு இல்லை என்றும் சாட்சி கூறுகிறார். சர்வே எண். 453/12, 13 குறித்த கோப்புகளை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண். 453/12,13 ல் உள்ள சொத்து குறித்து நத்தம் செட்டில்மெண்டின் படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. இப்பட்டாவானது வீரணத்தேவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சாட்சியானவர் வீரணத்தேவர் மகன் ராசுத்தேவர் பெயரில் தற்போது பட்டா உள்ளதாக கூறுகிறார்.

6) வீரணத்தேவர் பெயரில் பட்டாவானது எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது குறித்து கோப்புகளைப்பார்க்காமல் என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். கோப்புகளை பரிசீலனை செய்யாமலேயே பட்டா வழங்கியது பற்றி முதல்விசாரணை பாரா 3 ல் கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. வாதியானவர் பிராதில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேலும், குறிப்பாக என்னென்ன பரிகாரங்கள் கோரியுள்ளார் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7) எனக்கு வாதியானவர் தாவாவில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்பது குறித்து தெரியாத நிலையில், நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் 1 வது பரிகாரம் குறித்து கூறியுள்ள கருத்து தவறானது என்று எதன் அடிப்படையில் நான் கூறுகிறேன் என்றால் நான் எங்களது அலுவலகத்தில் உள்ள கோப்புகளில் உள்ள விசயத்தைத்தான் தான் கூறுகிறேன் என்று சாட்சி கூறுகிறார். எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள விசயங்களை நான் கூறி தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) சர்வே எண். 453/12, 453/13 க்கு எந்த தேதியில் பட்டா வழங்கப்பட்டது என்று என்னால் கூறமுடியுமா என்றால் முடியாது. சுமார் எந்த

வருடம் இருக்கும் என்றால் 1992ம் வருடமாகும். 1992ம் வருட காலக்கட்டத்தில் சர்வே எண். 453/11ஆனது சந்துப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எங்களது வருவாய் துறை ஆவணங்களில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த சந்துப்பாதையை மறித்து 1,2 பிரதிவாதிகள் சுவர் கட்டியிருந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த சுவரானது அரசாணை எண். 540-ன் கீழ் பின்பற்றி அகற்றப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு அகற்றிய விபரங்கள் எங்களது வட்டாட்சியர் அலுவலக கோப்புகளில் உள்ளது என்றால் அரசாணை 540-ன் கீழ் அகற்றப்பட்டால், அது குறித்த விபரங்களானது சம்பந்தப்பட்ட அலுவலக கோப்பில் இருக்கும் என்று சாட்சி கூறுகிறார்.

9) சுவற்றை அகற்றிய விபரத்தை 3 முதல் 7 பிரதிவாதிகள் தங்களது எதிர் வழக்குரையில் மறைத்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 3 முதல் 7 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை பின்பற்றி என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தவறாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 முதல் 7 பிரதிவாதிகள் 1,2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய உத்தரவில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்ற உத்தரவு உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் வாதியானவர் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

10) சர்வே எண். 453/11 குறித்து 2017ம் வருடம் தான் ராசுத்தேவருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 453/12,13 க்கு 1992ம் வருடத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில், சர்வே எண். 453/11 மற்றும் 453/12, 13யை ஒருங்கிணைத்துத்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இது குறித்து நான் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றால்

சரியல்ல. சர்வே எண். 453/12, 13 ஆனது ராசுத்தேவர் பெயரில் பட்டா உள்ள நிலையில் சந்துப்பாதையாக இருந்த சர்வே எண். 453/11 க்கு 2017 ம் வருடம் பட்டா வழங்கியது சட்ட விரோதமானது என்றால் வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின்பேரில் தான் பட்டா வழங்கப்பட்டதாக சாட்சி கூறுகிறார். வருவாய் கோட்டாட்சியர் தவறாக உத்தரவு பிறப்பித்ததால் தான் மேற்படியாரும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு, பட்டாவானது நீக்கம் செய்யப்படவேண்டும் என்று வாதி தரப்பில் பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11) சர்வே எண். 453/40 குறித்த பட்டாவானது வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் C3 வரைபடமானது எனக்கு முன்பிருந்த சர்வேயரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் தனது அலுவலக புல வரைபடங்களை பரிசீலினை செய்து அதன் அடிப்படையில் அளந்து தான் அளவு வரைபடம் தயார் செய்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 453/40 நான்கு புறமும் மஞ்சள் நிறமிட்டு சந்து பாதை காட்டியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 453/39 கிழமேல் சந்து பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 453/12,13 கிழக்கு பக்கம், வடக்கு பக்கம் பச்சை நிறமிட்டு சந்து பாதை காட்டியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 453/11 யை சிவப்பு நிறமிட்டு காட்டியுள்ளார் என்றால் சரிதான்.

12) நீ.ம.சா.ஆ 3 ன் படி சர்வே எண். 453/11 லிருந்து கிழக்கு நோக்கி சென்று இடப்பக்கமாக திரும்பி சந்து வழியாக சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பி சர்வே எண். 453/39 சந்து பாதையை அடைய முடியும் என்றால் வர முடியாது என்று சாட்சி கூறுகிறார். நான் நீ.ம.சா.ஆ 3 க்கு முரணாகவும், 1,2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 453/40 ல் வடகிழக்கு பக்கம் 0.8 என்கிற ஒரு அளவு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அளவானது உட்பிரிவு 40 யுடன் சேர்ந்த அளவு என்றால் சரிதான்.

13) சர்வே எண். 453/12,13 குறித்த பட்டாவானது கூட்டு பட்டா அல்லது தனி பட்டாவா? என்றால் தனிப்பட்டாவாகும். 1, 2 பிரதிவாதிகள் தங்களது பத்திரத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டதாக கூறுகிறார்கள் என்றால் சரிதான். பத்திரத்தில் கண்ட அளவுகளை விட கூடுதலாக 3 முதல் 7 பிரதிவாதிகள் சட்ட விரோதமாக செயல்பட்டு பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் தவறாகும். அவ்வாறு வழங்கிய சர்வே எண். 453/11 பட்டாவானது ரத்து செய்யப்படவேண்டியது என்றால் வருவாய் கோட்டாட்சியருக்கு மட்டுமே அந்த அதிகாரம் உள்ளதாக சாட்சி கூறுகிறார். அவ்வாறு வருவாய்கோட்டாட்சியர் சட்ட விரோதமாக, ஒருதலைபட்சமாக செயல்பட்டதால் தான் வாதியானவர் நீதிமன்றத்தை அணுகியுள்ளார் என்றால் சரிதான்.

14) எனக்கு முன்பாக வட்டாட்சியர் சார்பாக வருவாய் ஆய்வாளர் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அச்சமயத்தில் புல வரைபடங்கள் கிழிந்த நிலையில் இருந்ததால் தொடர்ந்து சாட்சியம் அளிக்க முடியாமல் மேற்படி சாட்சியானவர் சென்று விட்டார் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 3 தயார் செய்யும்போது மேற்படி புல வரைபடமானது நல்ல நிலையில் இருந்தது என்றால் சரிதான். சர்வே எண். 453/10 யார் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் ஆங்கத்தேவர் பெயரில் உள்ளது. மேற்படி ஆங்கத்தேவர் 1,2 பிரதிவாதிகளுக்கு நெருங்கிய உறவினர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 1,2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாகவும், அலுவலக ஆவணங்களுக்கு முரணாகவும் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியமானது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

PRAVEENA
Digitally signed by PRAVEENA
Date: 2026.07.28 18:21:20 +0530

District Munsif ,
Uthamapalayam.